**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 83/2022**

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 07 ஆம் நாள் வியாழக்கிழமை என்பவரது சாட்சியாகிய **சுரேஷ்** இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 07.12.2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுரேஷ் | Defence | : | |
| Father Name | : | சீத்தாராமன் | Court | : | |
| Village | : | திருநன்றியூர் | Taluk | : | |
| Calling | : | | Religion | : | |
| Age | : | 49 | | | |

முதல் விசாரணை:

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

29.07.2013 தேதியிட்ட வாதிக்கு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 21.02.2011 தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெற்ற கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வாசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.